විශ්‍රාම වැටුප් දෙපාර්තමේන්තුව

ஓய்வூதியத் திணைக்களம்
DEPARTMENT OF PENSIONS

ශ්‍රී ලංකා විශ්‍රාම
இலங்கை ஓய்வு
Sri Lanka Pensions

පරපුරක අභිමානය   தலைமுறையொன்றின் பெருமிதம்   Pride of a Generation

මගේ අංකය
எனது இல. } ஓய்வூதிய அறிவுறுத்தல்
My No.
கடித இல் : 01/2022

ඔබේ අංකය
உமது இல. } ..........................
Your No.

දිනය
திகதி } 2022.03.11
Date

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
மாவட்ட செயலாளர்கள்,
பிரதேச செயலாளர்கள்,
உள்ளூராட்சி அதிகாரசபைகளின் தலைவர்கள்,

**<u>அரச அலுவலர்களின் கட்டாய ஓய்வுபெறச்செய்யும் வயதினை 65 வயது வரை நீடித்தல்</u>**

2022.01.06 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை 02/2022 மற்றும் 2022.01.19 ஆந் திகதிய 2263/5 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி பத்திரிகை ஊடாக ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 2அஅ மற்றும் 17 ஆம் பிரிவுகள் 2022.01.01 ஆந் திகதி முதல் வலுவுக்கு வரும் வகையில் திருத்தியமைக்கப்படுகின்றன.

02. 2012.02.03 ஆந் திகதிய 1743/28 இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி ஊடாக 1953 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதியச் சட்டம் மற்றும் 1979 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க பிரிவேனாக் கல்விச் சட்டம் என்பவற்றின் கீழ் ஓய்வூதிய உரித்தினைப் பெறும் ஆசிரியர்கள் மற்றும் 2018.08.16 ஆந் திகதிய 2084/59 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிக குடியரசின் அதிவிசேட வர்த்தமானி மூலம் 1974 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூராட்சி சேவை சட்டம், துணைச்சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் கீழ் ஓய்வூதிய உரித்தினைப் பெறும் உள்ளூராட்சி அலுவலர்களுக்கும் ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகள் அவ்வாறே பொருந்தும்.

03. எனவே, பிரிவேனா ஆசிரியர்கள், அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மேலும் உள்ளூராட்சி ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பணியாற்றும் உள்ளூராட்சி அலுவலர்கள் ஆகியோர் மேலே 02 குறிப்பிடப்பட்டுள்ள திருத்தப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் 65 வயது வரை பணியாற்ற முடியும்.

04. அரசியலமைப்பு சட்டத்தின் பிரகாரம் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதெல்லை 65 வயதாகவும், மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும்

මාළිගාවත්ත, කොළඹ 10. மாளிகாவத்தை கொழும்பு 10. Maligawatta, Colombo 10.
Hot line: 1970, Direct line: 2209800, Fax: 2342078, Email: info@pensions.gov.lk, Web: www.pensions.gov.lk

சட்டத்தின் பிரகாரம் மேல் நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதெல்லை 61 வயதாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன் படி இவ் அலுவலர்களுக்கு ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் மேற்கூறப்பட்ட 02 ஆம் பிரிவின் திருத்தப்பட்ட ஏற்பாடுகள் பொருந்தாது.

05. மேலும் "ட" அட்டவணைக்குரிய அலுவலர்கள் தொடர்பாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல் வேண்டும்.

I. அரச சேவைக்கு வெளியிலிருந்து "ட' அட்டவணையின் கீழ் குறித்தொதுக்கப்பட்ட உத்தியோகத்திற்கு அல்லது பதவிக்கு நியமிக்கப்பட்ட ஒரு அலுவலருக்கு, அத்தகைய உத்தியோகத்தை அல்லது பதவியை நூற்றியிருபது மாதங்களோ அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதிக்கோ வகித்திருப்பின், 10 ஆண்டு காலப் பகுதிக்கு அவரது சம்பளத்தின் 1/3 பங்கிற்குச் சமமான ஓய்வூதியத்தையும் அதன் பின்னரான ஒவ்வொரு முழு ஆண்டுச் சேவைக்கும் சம்பளத்தின் 1/30 பங்கு வீதம் ஓய்வூதியத்தை பெற உரித்துடையவராவதுடன் 20 வருட சேவைக்காலத்தில் கடைசியாக பெற்ற சம்பளத்தின் 2/3 பங்கு வரை அதிகபட்ச ஓய்வூதியமாக பெற உரித்துடையவராவார். திறமையின்மை அல்லது துர்நடத்தை காரணமாக இவ் அலுவலரின் சேவை முடிவுறுத்தப்படின் ஓய்வூதிய உரிமை கிடைக்கப்பெற மாட்டாது.

II. மேலே (I) இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் 2022.01.01 ஆந் திகதி அல்லது அதற்கு பின்னரான ஓய்வூதிய திகதியை கொண்டுள்ள "ட' அட்டவணை அலுவலர்களுக்கு மாத்திரம் பொருந்தும்.

ஓப்பம்./ஏ. ஜகத் டீ. டயஸ்
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்

பிரதிகள் :

1. ஜனாதிபதியின் செயலாளர் – த.த.த
2. பிரதமரின் செயலாளர் – த.த.த
3. அமைச்சரவைச் செயலாளர் – த.த.த
4. செயலாளர், அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு – த.த.த
5. செயலாளர், நிதி அமைச்சு – த.த.த
6. பாராளுமன்ற செயலாளர் நாயகம், இலங்கை பாராளுமன்றம் – த.த.த
7. கணக்காய்வாளர் நாயகம் – த.த.த